# ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டங்கள்!

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| மதுரை வடக்கு | மேலூர் | மாண்புமிகு பி.மூர்த்தி<br>வெங்கடேசன் எம்.எல்.ஏ.,<br>சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| மதுரை மாநகர் | மதுரை தெற்கு | மாண்புமிகு முனைவர்<br>பழனிவேல் தியாகராஜன்<br>கோ.தளபதி, எம்.எல்.ஏ.,<br>அன்னவயல் கணேசன் |
| மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் | சேடப்பட்டி மு.மணிமாறன்<br>நெல்லிக்குப்பம் புகழேந்தி<br>கவிஞர் சிவமுத்துவளவன் |
| தேனி வடக்கு | பெரியகுளம் | தங்க தமிழ்செல்வன், எம்.பி.,<br>கே.எஸ்.சரவணகுமார், எம்.எல்.ஏ.,<br>சௌமியன்<br>ஆலங்குடி செல்வராஜ் |
| தேனி தெற்கு | ஆண்டிப்பட்டி | கம்பம் ராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,<br>மகாராஜன், எம்.எல்.ஏ,<br>தக்கோலம் தேவபாலன்<br>எழும்பூர் கோபி |
| விருதுநகர் வடக்கு | விருதுநகர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன்<br>ஏஆர்ஆர். சீனிவாசன், எம்.எல்.ஏ.,<br>குடந்தை ரமேஷ் |
| விருதுநகர் தெற்கு | சாத்தூர் | மாண்புமிகு<br>கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்<br>சௌ.தங்கபாண்டியன், எம்.எல்.ஏ.,<br>நெல்லை மணி<br>ஆரூர் மணிவண்ணன் |
| இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | மாண்புமிகு<br>ராஜகண்ணப்பன்,<br>காதர்பாட்சாமுத்துராமலிங்கம்,<br>எம்.எல்.ஏ<br>கவிஞர்<br>ஆண்டாள் பிரியதர்சினி |
| தூத்துக்குடி வடக்கு | கோவில்பட்டி | மாண்புமிகு கீதாஜீவன்<br>மார்கண்டேயன், எம்.எல்.ஏ.,<br>கந்திலிகரிகாலன்<br>டாக்டர் கலைகதிரவன் |
| தூத்துக்குடி தெற்கு | திருவைகுண்டம் | மாண்புமிகு அனிதா<br>ஆர்.இராதாகிருஷ்ணன்<br>சண்முகையா எம்.எல்.ஏ.<br>கடலூர் இள.புகழேந்தி |
| திருநெல்வேலி கிழக்கு | அம்பாசமுத்திரம் | இரா. ஆவுடையப்பன்<br>ஆலங்குளம் மரியராஜ்<br>எஸ்.கே.ஶ்ரீராம்<br>சேலம் கோவிந்தன் |
| திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி | அப்துல் வகாப், எம்.எல்.ஏ.,<br>திருமதி விஜிலா சத்யானந்த்,<br>ஆம்பூர் தருமன் |
| தென்காசி வடக்கு | சங்கரன்கோவில் | இ. ராஜா, எம்.எல்.ஏ.,<br>மதுரை பாலா<br>திருப்பூர் கூத்தரசன் |
| தென்காசி தெற்கு | ஆலங்குளம் | ஜெயபாலன்<br>ஈரோடு இளையகோபால்<br>குடியாத்தம் பாரி |
| கன்னியாகுமரி கிழக்கு | நாகர்கோவில் | ஆர்.மகேஷ்<br>நெல்லை ஏ.ரவி<br>சிவகாசி ஜீவா |
| கன்னியாகுமரி மேற்கு | விளவங்கோடு | மனோ. தங்கராஜ்<br>ஆயிரப்பேரி மா.முத்துவேல்<br>உடன்குடி தனபால் |
| கிருஷ்ணகிரி மேற்கு | தளி | ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ.,<br>கம்பம் செல்வேந்திரன்<br>வழக்கறிஞர்<br>வி.வைத்தியலிங்கம்<br>ஆவடி கா.மு.ஜான் |
| திருப்பத்தூர் | திருப்பத்தூர் | கா.தேவராஜ், எம்.எல்.ஏ.,<br>நல்லதம்பி, எம்.எல்.ஏ.,<br>ஆலந்தூர் ஒப்பிலாமணி,<br>கவிஞர் ஏ.ராஜசேகர் |
| தருமபுரி கிழக்கு | தருமபுரி | பி.தர்மசெல்வன்<br>வி.பி.ராஜன்<br>சபி சுலைமான் |
| தருமபுரி மேற்கு | பாலக்கோடு | முனைவர் பழனியப்பன்<br>சேலம் இரா.தமிழரசன்<br>குடியாத்தம் புவியரசி<br>குமரி பிரபாகரன் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள்: 07–03–2025.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய கல்வி நிதியைத் தராமல்

# ஒன்றிய கல்வி அமைச்சர் தரம் தாழ்ந்து பேசுவதா?

### அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் கண்டனம்!

சென்னை, மார்ச் 11

நாடாளுமன்றத்தில் ஒருங்கிணைந்தக் கல்வி திட்டதின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய கோரியபோது ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழர்கள் அநாகரிகமானவர்கள் என கொச்சைப்படுத்தியதை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம் என நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசு அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கீடு செய்த சுமார் ரூ.2152 கோடியை விடுவிக்காமல் தமிழகத்தை வஞ்சிக்கிறது. அதாவது ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மும்மொழி கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டிலும் அமல்படுத்த வேண்டும் அப்படி அனுமதித்தால் மட்டுமே நிதியை விடுவிக்க இயலும் என்று தெரிவித்து ஏற்கனவே நிதியை பீகார் உத்திரப்பிரதேச மாநிலத்திற்கும் மடைமாற்றம் செய்து ஓரவஞ்சனை செய்துள்ளது.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலமாக தான் 12 ஆயிரம் பகுதிநேர



சிறப்பாசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுனர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பராமரிப்பு ஆசிரியர்கள் என 15 ஆயிரம் ஆசிரியர்களின் ஊதியம் வகுப்பறை கட்டடங்கள், கட்டடங்கள் பழுது பார்த்தல் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ஆசிரியர்களுக்கான அனைத்துவகை பயிற்சிகள் மேற்கொள்ள இந்த நிதியை தான் பயன்படுத்துகின்றனர் ஆனால் ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் அமல்படுத்தினால் மட்டுமே ரூ.2152 கோடியை விடுவிக்க இயலும் என தெரிவித்து நிதியை உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களுக்கு மடைமாற்றம் செய்து மிரட்டுகிறது, இது எதனால் என்றால் இந்தியையும் சமஸ்கிருத மொழியையும் தமிழ்நாட்டில் கொண்டுவந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவர்கள் நலனில் தாய் தந்தைக்கு நிகராக காலை உணவு திட்டம், மேற்படிப்பில் சாதித்து பல துறைகளில் வேலைவாய்ப்பு பெற நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களை கொண்டுவந்து இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் என்பதை பறைச்சாற்றுகின்றார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வடிவமைத்து செயல்படுத்தி வரும் திட்டங்களை தடுத்து நிறுத்தி தமிழ்நாட்டு மாணவர்களையும் இளைஞர்களின் கல்வியையும் சீரழித்து தமிழ்நாட்டு கல்வித்தரத்தை சிதைத்து சின்னாபின்னமாக்க நினைக்கிறது ஒன்றிய அரசு,

மாற்றான் தாய் மனப்பான்மை எண்ணத்தில் பி.எம்.ஶ்ரீ - திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய ரூ. 2152 கோடியை உத்திரப்பிரதேசம் மாநிலத்திற்கும் குஜராத் மாநிலத்திற்கும் மடை மாற்றம் செய்ததை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.

மேலும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கேள்வி நேரத்தில் அதாவது தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போது நிதி ஒதுக்குவது குறித்து பேசாமல் தமிழர்கள் அநாகரீகமானவர்கள் என வஞ்சனையோடு பதிலளித்த செயல் ஒட்டு மொத்த தமிழர்களையும் இழுவுப்படுத்திய செயல் ஒன்றிய அரசின் அடாவடித் தனத்தை பறைச்சாற்றுகிறது. இதை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.

மேலும் மடைமாற்றம் செய்து உத்திரப்பிரதேச மாநிலத்திற்கும் பீகார் மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதியை திரும்ப பெற்று அந்த நிதியை உடனே தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தியும் மும்மொழியை திணிக்கும் புதிய கல்விக் கொள்கையை கைவிட வேண்டும் என்றும் தமிழ்நாடு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சா.அருணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வயது மூப்பின் காரணமாக உயிரிழந்த மருத்துவர் சி.யு.வேல்முருகேந்திரன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று (10.3.2025) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

## புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு!

மாதவரம், மார்ச் 11-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி, கோடை வெயிலின் தாக்கத்தை குறைக்க பொதுமக்களுக்கு தண்ணீர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்,17 வது வட்டம் சின்ன தோப்பு வடபெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு எதிரே, ஆட்டோ ஓட்டுனர்கள், பொதுமக்கள் பயன்படுத்தும் வகையிலும், பேருந்து நிலையம், வாகன ஓட்டிகளுக்கு வசதியாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தண்ணீர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில், வட்ட நிர்வாகிகள் சி. பாலாஜி, சி. மூர்த்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகபிரியன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் டி. வினோத், ஜி, ராஜ்குமார், பாக முகவர்கள் என். நாகராஜன், டி. திவாகர்,வி. சுமீர், ஜி. கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தண்ணீர் பந்தலில் தர்பூசணி, இளநீர், வெள்ளரிக்காய், மாதுளம் பழம், பனங்காய் மற்றும் குளிர்பானங்கள் ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

500க்கும் மேற்பட்ட பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் தங்களது தாகத்தை தணித்துக் கொண்டார்கள். தொடர்ந்து தினந்தோறும் இந்த இடத்தில் நீர் மோர் மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் தீயம்பாக்கம் எம். ஜான்சன், இ. சுதர்சன்,ஜி. பூபாலன், வடபெரும்பாக்கம் பி. செந்தில், எம். மைக்கேல், எம். கோவிந்தன், ஜி. முனிவேல், செல்வம் எஸ் .கமலநாதன், வழக்கறிஞர் எம். என். தளபதி, கே. சாந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்

தண்ணீர் பந்தல் திறப்புக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.


மறைவு : 11-03-2017



எட்டாம் ஆண்டு
நினைவஞ்சலி

முன்னாள் தி.மு.க.நகர செயலாளர்
நகர கூட்டுறவு அர்பன் வங்கி மு.தலைவர்
சோளிங்கர்
நினைவில்வாழும் சு.த.இராதா
அவர்களுக்கு எங்கள் நினைவு அஞ்சலி

மா.சுப்பிரமணியன் B.A.,L.L.B.,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்

இராணிப்பேட்டை ஆர்.காந்தி
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர்

வழக்கறிஞர் N.R.இளங்கோ B.L.,MP
கழக சட்டத்துறை செயலாளர்

AMV.பிரபாகர்ராஜா MLA
விருகம்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர்
மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர்

S.T.தங்கராசன்
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்

அன்புத்தந்தை காட்டிய முத்தமிழறிஞரின் பாதையில்
கழகத்தலைவர் வழியில் தொடர்ந்து பயணிப்போம் !

நினைவுகளுடன் :
ச.ரா.சீனிவாசன் M.A.,
சென்னை தெற்கு மாவட்டப் பிரதிநிதி

மற்றும் குடும்பத்தினர்கள்
கலைஞர்நகர் பகுதி தி.மு.க. சென்னை (தெ) மாவட்டம்
சோளிங்கர் நகர தி.மு.க. இராணிப்பேட்டை மாவட்டம்